# இனம்

இனம் இனத்தைச் சேரும்

ISSN : 2455 - 0531

Mail Id: inameditor@gmail.com
editor@inamtamil.com

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

International E-Journal of Tamil Studies

UAN.TN03D0061112

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர்:5 இதழ்:18 ஆகஸ்ட் 2019

Vol. 5 Issue : 18 August 2019








ஆ.சந்திரன்
எஸ்.கலைச்செல்வம்
ஷா. முஹம்மது அஸ்ரின்
ப.ராகசுதா
சி.விஜயன்

ஆ.மணி
ச.கண்ணதாசன்
இரா. இராஜா
வ.கோபாலகிருஷ்ணன்
மூ.அகல்யா

ம.செந்தில்குமார்
எம்.என்.இக்ராம்
சி.சாவித்ரி
சே.முனியசாமி
க.பாலாஜி

Inam ISSN : 2455 - 0531
UAN.TN03D0061112

# இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
International E-Journal of Tamil Studies

## பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
தமிழ் உதவிப்பேராசிரியர்
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி - 17.

முனைவர் த.சத்தியராஜ்
தமிழ் உதவிப்பேராசிரியர்
ஸ்ரீகிருஷ்ணா ஆதித்யா கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 42.

## ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (கோவை)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் இரா.இராஜா (திருச்சி)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (தஞ்சாவூர்)
திருமிகு எப்.எச்.அகம்மது சிப்லி (இலங்கை)

இதழாக்கமும் வெளியீடும்
இனம் பதிப்பகம், கோவை
inameditor@gmail.com
www.inamtamil.com
9600370671, 9677821364

ஆகஸ்ட் 2019 மலர் : 5 இதழ் : 18
August 2019 Volume V Issue 18

## உள்ளே ...

### தமிழ்ச் செவ்வியல்

பாட்டு - பத்துப்பாட்டு : பெயர்மாற்ற வரலாறு
The history of the name change pattu to pathuppaattu
முனைவர் ஆ.சந்திரன் | Dr.A.Chandran | 4

சங்க காலத்தில் நிலவிய சாட்சியச் சட்டவியல்
Jurisprudence of Evidence existed in Sangam Age
எஸ்.கலைச்செல்வம்/S. Kalaiselvan | 17

கீழ்க்கணக்கு நூல்களில் 'இளிவரல்' மெய்ப்பாடு
The emotion of disgust in keezhkanakku
ஷா. முஹம்மது அஸ்ரின்/S.Mohamed Azrin | 25

தொல்காப்பிய வழி அகத்திணை மாந்தர்கள்
Tolkippian way internal Mankind
ப.ராகசுதா/B.Ragasudha & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 30

பாணர்களின் உணவுப்பொருளாதாரமும் அரசியல் மரபும் (Food Economy of Paanar is Political Tradition)
ல.கு.சு.இராஜ்குமார்/L.K.S.Rajkumar & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 35

பத்துப்பாட்டில் உணவு
Food in Paththuppattu
சி.விஜயன்/ C.Vijayan & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 42

### பக்தி இலக்கியம்

அடியாரைத் தெய்வமாக்கிய மதுரகவியாழ்வாரின் அமுத மொழிகள்
Aṭiyārait teyvamākkiya maturakaviyāḻvāriṉ amuta moḻikaḷ
முனைவர் ஆ.மணி/Dr.A.Mani | 49

மீவியற் புனைவுகளுள் 'கனவு' பெறும் இடம் (திருவிளையாடற் புராணத்தை முன்வைத்து)
Dream and the story flow in the supernatural things (Based on the Thiruvilaiyadal Puranam)
முனைவர் ச.கண்ணதாசன்/Dr.S.Kannadasan | 55

# Chief Editors

**Dr.M.Muneesmoorthy**
*Assistant Professor in Tamil*
*Bishop Heber College, Trichy - 17.*

**Dr.T.Sathiyaraj**
*Assistant Professor in Tamil*
*Sri Krishna Adithya College of Arts and Science, Coimbatore - 42.*

# ADVISORY TEAM

*Dr.S.V.Shanmugam (Chidambaram)*
*Dr.S.Rajaram (Nagarkovil)*
*Dr.Silambu.N.Selvarasu (Pondichery)*
*Dr.N.Veluchamy (Salem)*
*Sri S.SriKantharasa (Australia)*

# Editorial Team

*Dr.A.Mani (Pondichery)*
*Dr.G.Balaji (Coimbatore)*
*Dr.R.Gunaseelan (Coimbatore)*
*Dr.N.Rajendran (Coimbatore)*
*Dr.R.Raja (Trichy)*
*Dr.B.Sivamaruthi (Thailand)*
*Dr.S.Muthuselvam (Madurai)*
*Dr.S.Vijaya Rajeshwari (Thanjavur)*
*Thiru.F.H.Ahamed Shibly (Srilanka)*



**சூனிய சம்பாஷணையில் புலப்பாட்டு உத்திகள்**
Expressional Strategies on Cipher Discourse
முனைவர் இரா. இராஜா/Dr.R.Raja | 65

**பெரியவாச்சான்பிள்ளை உரையில் வினா அமைப்பு**
Question Structure of Periyavachan Pillai Commentary
வ.கோபாலகிருஷ்ணன்/V.Gopalakrishnan | 73

**தற்கால இலக்கியம்**

**தாயுமானவனாகிய இமையத்தின் பெத்தவன்**
The mother is the epitome of this (Imayam)
மு.அகல்யா / M. Ahalya & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 79

**வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்**

**பன்முக நுண்மதி, மனவெழுச்சி நுண்மதி - பின்னணியும் பிரயோகமும் -**
Multiculturalism, psychoanalysis (background and application)
எம்.என்.இக்ராம்/M.N.Ikaram | 84

**ஒப்பிலக்கியம் கற்பித்தல் அணுகுமுறைகள் (திருக்குறள் - வேமன சதகம்)**
Comparative Teaching Approaches (Thirukkural - Vamana Satakam)
முனைவர் சி.சாவித்ரி | Dr.Ch.Savithri | 108

**முதுகுளத்தூர் சதாவதானம் சரவணப்பெருமாள் கவிராயர் (பேரர்)**
Mudukulathur sathavathanam saravanaperumal kavirayar and his erudition
முனைவர் சே.முனியசாமி / Dr.S.MUNIYASAMY | 122

**சிந்துவெளி - பெருங்கற்காலத் தரவுகளை முன்வைத்துப் பாண்டியரின் தொன்மங்கள்**
(Pandiyas myth based on the Indus civilization - Megalithic evidences)
முனைவர் க.பாலாஜி | Dr.G.Balaji | 137


•••

மதிப்பிடப்பெற்றது

# சிந்துவெளி – பெருங்கற்காலத் தரவுகளை முன்வைத்துப் பாண்டியரின் தொன்மங்கள்

## (Pandiyas myth based on the Indus civilization – Megalithic evidences)

முனைவர் க. பாலாஜி / Dr.G.Balaji[19]

*Abstract: The myths of the Pandya's are prevalent in Indian literature. The Pandya's myths are explicitly represented in the Chinnamanur copper plate, the Shatapathapramana, Mahabharata, and the Tamil Talapuranas. The references to the tsunami reported in the Tamil literature can be considered as oral myths. The Pandiya's are the symbolic fish symbols found in the Indus Valley script and the Tamil Nadu megalithic Pottery. The above two archaeological places are directly related to the same linear codes. These codes are still available in excavations in Sri Lanka and Tamil Nadu. In his excavations, Harappa archaeologist Vasant Shinde has clearly established that the genomes of the irulas and thodas ethnic groups living in South India match the bones found in Harappa. The Pandya's have migrated north due to a tsunami that occurred around the same time. The event has become a mythical stories in Indian literature and mythology.*

**Date of submission: 2019-06-25**
**Date of acceptance: 2019-07-23**
**Date of Publication: 2019-08-05**
**Corresponding author's**
**Name:** முனைவர் க.பாலாஜி
**Email:** balajiand@gmail.com

**Keywords:** irulas and thodas, ethnic groups, South India, bones found, Harappa, G.Balaji, இந்திய மரபில், பழமரபுக் கதைகள், சமற்கிருத வேதபுராணக் கதைத் தொன்மங்கள், பிரளயம்-பெருஞ்சுனாமி, தோணி(மீன்), தொன்மக் கூறுகளோடு, பாண்டிய மன்னர், வரலாற்றுத் தரவுகள், சிந்துவெளி, பெருங்கற்காலத் தரவு, இந்தியத் துணைக்கண்டத்தின் பூர்வகுடிகள், பாண்டியர்கள், க.பாலாஜி.

### ஆய்வுமுகம்

இந்திய மரபில் தங்களின் இருப்பை முதன்மைப்படுத்திக் கொள்ள முனையும் பெரும்பாலான இனங்கள் தங்களுக்கான வரலாற்றாவணங்களாகத் தொன்மக் கதையாடல்களை முன்னிறுத்துகின்றன. குறிப்பிட்ட தேசிய இனங்கள் அல்லது சிறிய அளவிலான இனக்குழுக்களின் வரலாற்றைக் கட்டமைக்கத் துணைபுரியும் சான்றுகளில் இத்தொன்மங்கள் மட்டும் தற்காலத்திலும்

---

[19] தமிழ் உதவிப் பேராசிரியர், பூ.சா.கோ.கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்- 641 014. balajiand@gmail.com

வாய்மொழிக் கதைகளாக வழங்கப்பெற்று வருகின்றன. இசுலாமிய மற்றும் கிறித்தவ வேதாகமங்களின்வழி அறியப்படுகின்ற பழமரபுக் கதைகள், சமற்கிருத வேதபுராணக் கதைத் தொன்மங்கள் ஆகியன பிரளயத்திலிருந்து மனித இனத்தைக் காத்துநின்ற தத்தம் கடவுளர்களில் இருந்து உலகம் தொடங்குவதாகக் குறிப்பிடுகின்றன. இவ்வகையான தொன்மக் கதையாடல்களின் மூலத்தில் அடர்த்திகுறைந்த ஓர் உண்மையான வரலாற்று நிகழ்வொன்றும் அமைந்திருக்கும். அதேவேளையில் தொன்மங்கள் அவ்வுண்மையான வரலாற்று நிகழ்வினை முழுமையாக விழுங்கிக் கொண்டிருக்கும் பேராபத்தும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. அவ்வாறு விழுங்கப்பெற்ற ஆதியினங்களின் வரலாறு இந்தியத் துணைக்கண்டத்தில் மிகுதி. அவ்வரிசையில் பாண்டியர் என்ற தொல்லினக் குழுவினர் தவிர்க்கவியலாதவர்களாய் அமைகின்றனர். வரலாற்றுக் கட்டமைப்பின் மூலப்பொருள்களாகக் கருதப்பெறும் எழுத்தாவணங்கள், இலக்கியச் சான்றுகள், தொன்மங்கள் ஆகியனவற்றின் அடிப்படையில் இந்தியத் துணைக்கண்டத்தின் மிகுதொன்மையுடைய மரபினர்களாய்ப் பாண்டியர்களை முன்னிறுத்த முடியும். ஏனெனில் வரலாற்றின் பழமையான எழுத்தாவணங்களும் வரலாற்றிற்கு முந்தைய எழுத்தற்ற வாய்மொழி ஆவணங்களும் பாண்டியர்களோடு மட்டும் பெரிதும் தொடர்புடையனவாகக் காணப்பெறுகின்றன. பழமரபுக்கதைகள் குறிப்பிடும் கடல்கோள் (பிரளயம்–பெருஞ்சுனாமி), தோணி(மீன்) குறித்த தொன்மக் கூறுகளோடு பாண்டிய மன்னர்களுக்கு நெருங்கிய தொடர்பு இருப்பதனை வரலாற்றுத் தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன. இவற்றைச் சிந்துவெளி மற்றும் பெருங்கற்காலத் தரவுகளுடன் ஒப்பிட்டு இந்தியத் துணைக்கண்டத்தின் பூர்வகுடிகளாக விளங்கியவர்கள் பாண்டியர்கள் என்பதை நிறுவுவதாக இவ்வாய்வுரை அமைகின்றது.

**பாண்டியரின் நெடிய மரபும் தொன்மங்களும்**

'நெடியோன்' என்ற 'வடிம்பலம்ப நின்ற பாண்டியன்' பற்றிய குறிப்புகள் சங்கநூல்களின் பலவிடங்களில் காணப்பெறுவதாகச் சதாசிவ பண்டாரத்தார் தம் நூலில் குறிக்கின்றார்.

*'இவன் கடல்பிரளயத்தால் குமரிமுனைக்குத் தெற்கிலிருந்த குமரிநாடு முதலியன அழிதற்கு முன்னர் அக்குமரிநாட்டில் பஃறுளி என்றதோர் ஆற்றை வெட்டுவித்துக் கடற்றெய்வத்திற்கு விழவெடுத்தனன். இச்செய்தி புறநானூற்றிலுள்ள ஒன்பதாம் பாடலால் நன்கறியப்படுகின்றது. ஆகவே இவன் தலைச்சங்கத்தி னிறுதியில் வாழ்ந்தவ னென்க'* (பாண்டியர் வரலாறு,பக்.12).

இதன் அடிக்குறிப்பில் மூன்று வரலாற்றுக் குறிப்புகளைத் தருகின்றார்.அவை வருமாறு:

1. நிலந்தந்த பேருதவிப் பொலந்தார் மார்பின் நெடியோ னும்பல்(மது.60–61)

2. முந்நீர் விழவின் நெடியோன், நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே(புறம்.9)

3. சின்னமனூர்ச் செப்பேடுகள் பாண்டியனொருவன் கடல் சுவற வேல் எறிந்த கதையையும் ஒரு பாண்டியனிடத்துக் கடல் அடைக்கலம் புகுந்த கதையையும் குறிக்கின்றன. கடற்பிரளயத்தால் உலகங்களெல்லாமழிய, ஒரு பாண்டிய அரசன் மாத்திரம் உயிர் வாழ்ந்திருந்த செய்தி வேள்விக்குடிச் செப்பேடுகளில் வரையப் பெற்றுள்ளது. இம்மூன்று கதைகளும் வடிம்பலம்ப நின்ற பாண்டியனைப் பற்றியனவே யாமென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். (பாண்டியர் வரலாறு,பக்.13)

சின்னமனூர்ச் செப்பேட்டில் பாண்டிய மன்னன் ஒருவன் மட்டும் பிரளயத்தில் இருந்து தப்பித்த செய்தியும் தன் கைவேலினை எறிந்து கடலை விலக்கி அடிபணிய வைத்த செய்தியும் இடம்பெற்றுள்ளன. இவற்றைச் செப்பேட்டில் இடம்பெற்றுள்ள பாண்டிய மரபினரின் தொன்மமாகக் கருதமுடியும். இவ்வாறே சதபதபிரமாணத்தில் இடம்பெற்றுள்ள பிரளயத் தொன்மக்கதையிலும் பாண்டியமரபினர் குறித்த செய்தியும் மீன் தோணியாக மாறிய செய்தியும் இடம்பெற்றுள்ளன. மீன் தோணியாக மாற்றமடைந்து நிலத்தில் கரையேறிய தொன்மம் பிற்காலத் தலபுராணங்கள் பலவற்றிலும் விரவிக் கிடக்கின்றது. பாண்டியர்களின் குறியீடாக மீன் தொன்றுதொட்டு வழங்கி வருதலை இனக்குழுச் சமூகவரலாற்றுப் பின்புலத்தில் ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. பஃறுளியாறு கடல்கோளில் மூழ்குவதற்கு முன்பே பாண்டிய இனக்குழுக்களின் குலக்குறியீடாக மீன் விளங்கியிருத்தல் வேண்டும். இன்றளவும் மீன் பாண்டியர்களின் குறியீடாகக் வழங்கப்பெற்று வருகின்றது. குறியீடுகள் எழுத்துவடிவங்களாக மாறத்தொடங்கிய பெருங்கற்காலத்தில் கிடைக்கப்பெறும் மீன்குறியீடுகள் தவிர்த்த பிறகுறியீடுகள் எதுவும் பிற்காலம் வரையில் தொடர்ந்து வழங்கப்பெற்று வருவதாகத் தெரியவில்லை. ஆனால் வரலாற்றெழுதியலுக்கு முன்பான தொன்மக்கதைகளில் தொடங்கி மிகப் பிற்காலம் வரையில் பாண்டியர்களுக்கு மீன் குறியீடாக இருந்து வருகின்றது. இது இந்தியப் பண்பாட்டு மரபில் வேறெந்த இனத்திற்கும் இருப்பதாக அறிய இயலவில்லை.

'சதபத பிரமாணத்தில்(1.8.1–10) பிரளயத் தொன்மம் இடம்பெற்றிருக்கின்றது. மனு வைகறை வழிபாட்டிற்காக ஆற்றுநீரில் அங்கசுத்தி செய்து கொண்டிருந்தார். அப்போது அவருடைய கையில் ஒரு மீன் அகப்பட்டது. அந்த மீன் மனுவிடம், 'ஒரு பெரிய பிரளயம் வரப்போகின்றது. அதில் உயிர்களெல்லாம் அழிந்துவிடும். இப்போது நீ என்னைக் காப்பாற்றினால் அப்போது நான் உன்னைக் காப்பாற்றுவேன்' என்றது. மீனை ஒரு கலயத்தில் விட்டார் மனு. அது பெரிதாயிற்று. மனு அதைக் குளத்தில் விட்டார். அது குளத்தளவு பெரிதாயிற்று. எனவே அதைக் கடலில் விட்டார். 'நீ ஒரு தோணியைச் செய். நான் தக்க நேரத்தில் வந்து உன்னைக் காப்பாற்றுகிறேன்' என்று அந்த மீன் கூறியது. குறிப்பிட்ட நாளில் பிரளயம் வந்தது. அது பிரம்மாண்டமாக இருந்தது. அதன் தலையில் ஒற்றைக்கொம்பு இருந்தது. தோணியைக் கொம்பில்

கட்டச் சொன்னது மீன். மனு அவ்வாறே செய்தார். தோணியை மீன் இழுத்துக் கொண்டுபோய் வடமலையில் சேர்த்தது என்று சதபதபிரமாணம் கூறுகின்றது. மகாபாரதத்தில் இக்கதை சிறிது மாற்றத்துடன் காணப்படுகின்றது. அதில் வைவசுத மனு வைசால வனத்தில் தவம் செய்யும் போது அருகில் இருந்த ஆற்றில் வந்த மீன் பிரளயம் பற்றி எச்சரித்துத் தோணி செய்யச் சொன்னது. பிரளயம் வந்தபோது வைவசுத மனு ஏழு முனிவர்களோடும் பலவகை விதைகளோடும் தோணியில் ஏறியதாகவும் தோணியை மீன் இமயமலையில் சேர்த்ததாகவும் அக்கதையில் சொல்லப்படுகின்றது. பாகவத புராணம் பிரளய காலத்தில் மனு தோணி ஏறிய இடம் தென்னிந்தியா என்றும் அந்த மனுவின் பெயர் சத்தியவிரதன் என்றும் அவன் திராவிட வேந்தன் என்றும் மனுவின் கையில் மீன் சிக்கிய இடம் மலையமலையில் ஊற்றெடுத்து வரும் கிருதமாலை என்னும் நதி என்றும் கூறுகின்றது(8.24.13). வைகை நதிக்குக் கிருதமாலை என்ற பெயரும் உண்டு. இச்சான்று பிரளயத் தொன்மத்தைத் தமிழர்களோடு மிக நெருக்கமாக வைத்திருக்கின்றது. மச்சபுராணத்திலும் இத்தொன்மம் சிறு வேறுபாடுகளுடன் காணப்படுகின்றது………….. தொன்மத்தின்படி மீனால் தப்பித்தவர்கள் என்பதால் அவர்கள் மீனைக் குலக்குறியாகக்(Totem) கொண்டிருக்கலாம். மீனைக் குலக்குறியாகக் கொண்ட பாண்டியர்கள் அவர்கள் வழிவந்தவர்களாக இருக்கலாம். இதனாலேயே சேர, சோழ, பாண்டியர் மூவரிலும் பாண்டியர்களே பழமையானவர்கள் என்று சிலர் கருதுகின்றனர் (கார்த்திக் செயராம்:2016).

இத்தொன்மக் கதைகளின்வழி அறியப்பெறும் சில கருத்தியல்களைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

1.பாண்டியன் தன் கைவேல் கொண்டு கடலைப் பிளந்து அடிபணிய வைத்தல்.
2.கடல்கோளில் இருந்து பாண்டியமன்னன் ஒருவன் தப்பிச்சென்ற நிகழ்வு.
3.முதற்கடல்கோள் இந்தியத் துணைக்கண்டத்தில் நிகழ்ந்தபொழுதே இங்கு பாண்டியன் ஒருவன் ஆட்சி புரிந்திருந்தது.
4.மீன் தோணியாக உருமாற்றம் பெறுதல் (தொன்மத்தின் இயல்பு).
5.மீனின் தலையில் கொம்பிருத்தல் (கொம்புச்சுறா வழிபாடு).
6.மீன் இமயமலை அல்லது வடமலைக்கு எல்லோரையும் அழைத்துச் செல்லுதல் (பாண்டியரின் புலம்பெயர்வு).

## மீன் குறித்த தொன்மங்களும் மானிடவியல் ஆய்வுகளும்

மீன் குறித்த தொன்மங்கள் வேதங்களிலும் இந்திய இலக்கிய மரபிலும் பரவலாகக் குறிக்கப்பெற்று வந்துள்ளன. இவற்றின் தாக்கம் வேத, புராணங்களை அடியொற்றி எழுந்த தமிழ் பக்தியிலக்கிய மரபிலும் தொடர்ந்து வந்துள்ளது எனலாம். ஆதியில் இருந்த மனுக்குலத்தின் தந்தையினை மனு என்று இந்திய மரபு முன்வைக்கின்றது. இஸ்லாமியத் தொன்மக் கதைகளின்படி 'ஆதம்' மனுக்குலத்தின் முதல் மனு எனக் கருதப்படுகின்றார். ஆதம் வழிவந்தவர்களில் நோவாவுடன் தப்பிவந்தவர்கள் தவிர யாவரும் பிரளயத்தில் அழிந்துவிட்டனர்.

தென்னிந்தியாவில் நிகழ்ந்த முதற்கடல்கோளே(பிரளயம்) மிகப்பெரும் தொன்மமாக அனைத்து இந்திய இலக்கியங்களிலும் உருப்பெற்றதெனலாம். சதபதப் பிரமாணத்தில் (Shatapatha Bramana,1:8.1-10 ) பிரளயத் தொன்மம் இடம்பெற்றுள்ளது.

மீனைக் குலக்குறியாகக் கொண்ட பாண்டியர்களுக்கும் இத்தொன்மக் கதையாடலுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதை இதன்மூலம் அறிய முடிகின்றது. ஆ.தனஞ்செயன் குறிப்பிடும் வேடன் மீனாக இது அமைந்து அவர்களின் சுறாக்கொம்பு வழிபாட்டில் முதன்மை பெற்றிருக்கலாம். சைவ சமயம் இத்தொன்மக்கதையினைச் சிவனுக்கு ஏற்றி சிவன் மக்களைக் காப்பாற்றத் தோணி ஏறிய இடம் 'தோணிபுரம்' (சீர்காழி தலவரலாறு: சம்பந்தர் தேவாரம்) என்றும்; அதன் காரணமாகத் தோணியப்பர் என்ற பெயர் சிவனுக்கு ஏற்பட்டதாகவும் கருதுகின்றனர். எமிலி தர்க்கைம் குறிப்பிடும் குலக்குறிக் கோட்பாடு இங்கு இத்தொன்மக் கதையாடலுடன் பொருந்துவதை அறிய முடிகிறது.

தமிழகக் கடற்கரையோர மீனவர்களின் குலக்குறியீடான மீன் பண்பாட்டசைவில் புனிதமடைந்து வழிபாட்டு உச்சத்தை அடைந்தது எனலாம். கடலுக்குச் செல்லும் மீனவர்களுக்குத் துன்பம் தரும் வேடன் மீன், கொம்புச்சுறா முதலிய மீனினங்கள் ( ஆ.தனஞ்செயன் : 2017 ) வழிபாட்டிற்குரிய உயரிய இடத்தைப் பெறுகின்றன. இதனால் அவற்றின் கொம்புகள் கரையில் வைத்து வழிபடப் பெறுகின்றன. அக்கொம்புகளின்மீது கடற்றெய்வங்கள் இறங்கி ஆற்றல் தருவதாக அம்மக்களால் நம்பப்படுகின்றது. உலகின் மூத்த இனங்கள் சிலவற்றில் கடல்தேவதை வழிபாடு முதன்மை பெறுகின்றது. கிரேக்கத் தொன்மத்தில் 'கலிப்சோ' கடல்தேவதையாகக் கருதப்பெறுகின்றாள். சங்கச்செவ்வியல் நூல்கள் 'கடல்கெழு செல்வி' (தொ.பரமசிவன் : 2018) எனப் பதிவு செய்துள்ளது. மீன்குறியீடு என்பது இங்குக் கடல்கெழு செல்வியாகிய பெண்தெய்வத்துடன் இணைத்துக் கூறப்பெற்றதெனலாம். அல்லது அச்சம் தரும் மீன் பெண்தெய்வத்தின் வாகனமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கலாம். இத்தகைய குறியீட்டுப் படிநிலைவளர்ச்சி பாண்டியர்களின் குலதெய்வமாகப் பிற்காலத்தில் மீனாட்சியினைக் (அங்'கயற்'கண்ணி) கட்டமைத்தது எனலாம். இதனைத் தாய்த்தொன்ம நிலையில் கொற்றவை வழிபாடாக நோக்கும்பொழுது பாண்டியர்களின் போர்த்தெய்வமாகி இந்தியத் துணைக்கண்டத்தில் பரவலாக்கம் அடைந்ததென நிறுவ இயலும். தாய்த்தொன்மம் தென்னிந்திய நிலப்பரப்பில் உருக்கொண்டமைக்கான சான்றாதாரங்கள் கிடைக்கப்பெறுகின்றன.

மத்திய ஆசியாவிலிருந்து சிந்துவெளி நோக்கிய ஆரியர் படையெடுப்பினை உறுதிப்படுத்தும் விதமாகப் பல தொன்மக் கருத்தியல்கள் கண்டறியப் பெற்றுள்ளன. ஆரியர்கள் இந்நிலத்திற்கானவர்கள் அல்லர் என்பதையும் சிந்துவெளி நாகரிகம் தமிழர்களுக்கானது என்பதையும் மானிடவியல் பின்புலத்தில் பக்தவத்சல பாரதி, தொ.பரமசிவன் உள்ளிட்ட ஆய்வாளர்கள் தம் ஆய்வுகளில் தொடர்ந்து பதிவுசெய்து வருகின்றனர். தாய்த்தெய்வமாகிய 'கொற்றவை' வடக்குநோக்கி அமர்ந்த தொன்மச் சான்றுகளைப் பெண்தெய்வ வழிபாட்டுப் பின்னணியுடன் தொ.பரமசிவன் சுட்டுகின்றார்.

'பழந்தமிழர்களின் தாய்த்தெய்வக் கோயில்களான அம்மன் கோயில்கள் 99 விழுக்காடு வடக்கு நோக்கியே அமைந்துள்ளன என்பதையும் நாம் இங்கு நினைவில் கொள்ளவேண்டும். கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் முப்புறமும் கடல் சூழ்ந்த நாடாகவே(அதாவது இன்றைய கேரளத்தை உள்ளிட்டு) தமிழகம் இருந்துள்ளது. எனவே பகைப்படை வட திசையிலிருந்து மட்டுமே வரமுடியும். தெய்வம் வடக்குத்திசை நோக்கித் தன் மக்களைக் காக்க ஆயுதம் ஏந்தி நிற்கின்றது என்பதே தொல் வரலாற்று உண்மையாகும். பழந்தமிழர்களின் தாய்த்தெய்வம், அரசுகள் உருவானபோது போர்த்தெய்வமாக மாற்றப்பட்டு 'கொற்றவை' என்ற பெயரோடு வழங்கப் பெற்றது. இப்பெயருக்கான வேர்ச்சொல் 'கொல்' என்பதாகும். பெருந்தெய்வக் கோயில்களில் ஆண் தெய்வத்திற்கு அருகில் நின்று கொண்டு அல்லது அமர்ந்து கொண்டிருக்கும் உமை, திருமகள் ஆகிய தெய்வப் படிமங்களின் கையில் நீலம், தாமரை ஆகிய மலர்களே காட்டப் பெற்றிருக்கும். ஆனால், தாய்த்தெய்வங்களோ பெரும்பாலும் சிங்கத்தின் மீது அமர்ந்த கோலத்தில் நான்கு அல்லது எட்டுக் கைகளுடன், எல்லாக் கைகளிலும் ஆயுதங்கள் ஏந்தியபடி போருக்கு ஆயத்தமான நிலையில் உள்ளன. இவை இரத்தப்பலி பெறுகின்ற தெய்வங்களாகும். எனவே இவற்றின் பூசாரிகளாகப் பண்டாரம், வேளார்(குயவர்), உவச்சர்(கம்பர்) போன்ற பார்ப்பனரல்லாத சாதியாரே உள்ளனர்'(தொ.பரமசிவன்,18 : 2018).

**பெருங்கற்காலக் கோட்டு வடிவ மீன்குறியீடுகளும் சிந்துவெளிப் பரவலும்**

சங்ககாலத்தைச் சேர்ந்த பாண்டியர் காசுகளில் மட்டுமல்லாது அதற்கு முன்னதான முத்திரைக்காசுகள், பெருங்கற்காலத்தைச் சேர்ந்த பானையோடுகள், புழங்குபொருட்கள் ஆகியனவற்றிலும் மீன்குறியீடுகள் கிடைத்தவண்ணம் இருக்கின்றன. இந்தியத் துணைக்கண்டத்தில் கிடைக்கப்பெறும் குறியீடுகளில் கோட்டுவடிவ மீன்குறியீடுகளை மிகத்தொன்மையானதாகக் கருதலாம். சிந்துவெளி எழுத்துகளிலும் மீன்குறியீடுகள் பல படிநிலைகளில் அசைநிலையாகக் காணப்பெறுகின்றன. உலகின் மூத்த நாகரிகங்களனைத்தும் நீரிடங்களை மையமிட்டு உருவாக்கம் பெற்றுள்ளமையின் காரணமாக மீன்குறியீடுகள் தொல்குடிகளின் பண்பாட்டில் தவிர்க்க முடியாததாயிற்று. இக்குறியீடுகள் பெருங்கற்காலப் பழம்பானையோடுகளில் கிடைக்கப் பெறுகின்றன. வைகை ஆற்றங்கரை நாகரிகமான கீழடியில் நிகழ்ந்த அகழாய்வில் கோட்டுவடிவ மீன்குறியீடுகள் புழங்குபொருட்களில் (பழம்பானையோடுகள்) கிடைத்துள்ளன.

ஆய்வுச் சிந்தனைகளை அனுப்ப – inameditor@gmail.com

புலனம் – இனம் வாசகர் வட்டம்

வலைக்காட்சி – இனம் வலைக்காட்சி

சிறந்த ஆய்வு நூல்கள் குறைந்த செலவில் அச்சிட்டுத் தரப்பெறும். மின்னூல் வடிவிலும்....



நன்றி : தமிழகத் தொல்லியல் துறை,
(அமர்நாத் இராமகிருட்டிணன்) கீழடி அகழாய்வுக்குழு, சிவகங்கை மாவட்டம்.

கீழடியில் கிடைக்கப்பெற்ற கருப்பு-சிவப்பு வண்ணம் கொண்ட மூன்றுதரமான பானையோடுகளில் மீன் குறியீடுகள் வரையப்பெற்றுள்ளன. முதல் பானையோட்டில் மீன்குறியீடு கோட்டுவடிவில் கீறப்பெற்றுள்ளது. இரண்டாவது பானையோட்டில் மீன்குறியீடு வளைகோடுகளால் வரையப்பெற்றுள்ளது. மூன்றாவது பானையோட்டில் மெல்லிய கீறல்களாக வளைகோட்டு முறையில் வரையப்பெற்றுள்ளது. இக்குறியீடுகள் அடித்தட்டுமக்கள் பயன்படுத்தும் புழங்குபொருட்களில் கிடைத்துள்ளன. இதன்மூலம் இக்குறியீடு அரசுருவாக்கத்திற்கு முன்னதான தொன்மையான பாண்டிய இனக்குழுக்களின் இயல்பான வழக்கத்தில் இருந்துள்ளது புலப்படுகின்றது. கோட்டுவடிவம், கீறல்முறை, வளைகோட்டு வடிவம் என்ற மூவகை நிலையிலும் மீன்குறியீடுகள் பொறிக்கப்பெற்றுள்ளன. இது குறியீட்டு வடிவங்களிலிருந்து எழுத்துவடிவங்கள் வளர்ச்சிபெற்ற நிலையினை ஒப்பிடத்தக்கதாக உள்ளது. கீறல்–கோடு–வளைகோடு என்ற மூன்று படிநிலையும் கீழடி அகழ்வாய்வில் கிடைத்திருப்பது கவனத்திற்குரியது. வைகை நதிக்கரைப் (கீழடி நாகரிகம்) பண்பாட்டில் மூன்றுவிதமான தன்மையில் அமைந்த மீன்குறியீடுகளுக்கும் தேவையிருந்திருப்பதை உணரமுடிகின்றது. குறியீடு ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு வளர்ச்சியடைய நீண்ட காலஇடைவெளி தேவைப்படும். இவ்விடைப்பட்டதான காலங்களில் வேற்றரசுகள் அல்லது வேற்றினக்குழுக்களின் படையெடுப்புகள் முதலான எவ்விதத் தலையீடுமின்றி இருந்திருத்தல் வேண்டும். இம்மீன்குறியீடுகளின் தொடர்வளர்ச்சிமுறை என்பது பாண்டிய இனக்குழுக்களின் அறுந்துபடாத தொன்மையான மரபுத்தொடர்ச்சியினை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. இராமநாதபுரம் மாவட்டம் அழகன்குளத்தில் செய்யப்பெற்ற அகழாய்விலும் பானையோட்டுப் பொறிப்புகளாகக் கோட்டுவடிவ மீன்குறியீடுகள் கிடைத்துள்ளன. கா.ராஜன் (*Early Writing System–A journey from Graffitti to Brahmi : 2015*) இக்குறியீடுகளைத் தொகுத்துள்ளார். இருவேறுபட்ட நிலைகளில் அமைந்த கீறல்களாக இக்குறியீடுகள் இங்குக் கிடைத்துள்ளன.



நன்றி : தமிழகத் தொல்லியல்துறை, அழகன்குளம்(இராமநாதபுரம் மாவட்டம்)
(K.Rajan, *Early Writing System–A journey from Graffitti to Brahmi: 2015*)

திருநெல்வேலி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் நிகழ்ந்த அகழாய்விலும் பானையோட்டுப் பொறிப்புகளில் கோட்டுவடிவ மீன்குறியீடுகள் கிடைத்துள்ளன. இங்குக் கிடைக்கப்பெற்ற மீன்குறியீடுகள் அனைத்தும் கீறல்முறையில் அமைந்த நேர்கோட்டு வடிவிலானவை. வடிவ ஒப்புமையில் சிந்துவெளிக் குறியீட்டு வடிவங்களை ஒத்ததாக இவை அமைகின்றன.



நன்றி : தமிழகத் தொல்லியல் துறை வெளியீடு.

கா.ராஜன் கொடுமணல் அகழாய்வில் பல்வேறுபட்ட நிலைகளில் அமைந்த 12 கோட்டுவடிவ மீன்குறியீடுகளைக் கண்டறிந்து வெளிப்படுத்தியுள்ளார். ஒற்றைக்கோட்டு வடிவில் அமைந்த மீன்குறியீடுகள் 11 கிடைத்துள்ளன. தலைப்பகுதியில் இரட்டைக்கோட்டு வடிவில் அமைந்த மீன்குறியீடு 1 கிடைத்துள்ளது. இது 'குறியீடு' என்ற நிலையில் இருந்து 'கருத்தெழுத்து' வடிவம் என்ற நிலைக்கு மாற்றம் பெற்றமையினைச் சுட்டுவதாக அமைகின்றது. ஒற்றைக்கோட்டு வடிவ மீன் குறியீட்டை 'மீன்' (குறியீடு) என்பதாக மட்டும் பொருண்மை கொள்ளும்பொழுது, இரட்டைக்கோட்டு வடிவ மீன்குறியீட்டைப் (sign.17.0, k.Rajan,*Early Writing System–A journey from Graffitti to Brahmi:2015*) பொருள் மாற்றம் கொண்ட கருத்தெழுத்து நிலையில் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது.




நன்றி : (k.Rajan, *Early Writing System–A journey from Graffitti to Brahmi: 2015*)

கொடுமணலில் கிடைத்த இரட்டைக் கோட்டுடைய மீன்குறியீடு (K.Rajan,sign.17.1:2015 ) போன்று சிந்துவெளி முத்திரையிலும் (The Indus Script,Sign.No.65,66,75:1977) காணப் பெறுகின்றது.

The Indus Script (Texts concordance and Tables)
Irawatham Mahadevan:1977






இதே போன்று தலைப்பகுதியின் மேற்பகுதியில் கோடுடைய மீன்குறியீடு இலங்கையில் கிடைத்த பாண்டியர் காசிலும் காணப்பெறுகின்றது.



*இலங்கையில் கிடைத்த பாண்டியர் காசு*

நன்றி : இரா.கிருஷ்ணமூர்த்தி, தென்னிந்திய நாணயவியல் கழகம்.

*மோதிரத்தில் கிடைத்த பாண்டியன் பெருவழுதியின் பெயரும் கோட்டுவடிவ மீன்குறியீடும்*



நன்றி : திருமதி பீனாசரசன், தென்னிந்திய நாணயவியல் சங்கம்.

இதன்மூலம் தமிழகம் மற்றும் இலங்கைப்பகுதியில் கிடைக்கப்பெறும் கோட்டுவடிவ மீன்குறியீடுகளுக்கும் சிந்துவெளியில் கிடைக்கப்பெறும் கோட்டுநிலை கொண்ட மீன்வடிவ அசையெழுத்துகளுக்கும் நேரடித்தொடர்பு இருப்பதனை அறிய அறியமுடிகின்றது.

**பெருங்கற்காலக் களஆய்வு**

ஈரோடு அருகிலுள்ள கொடுமணல் கிராமத்தில் மேற்பரப்பாய்வு செய்த பொழுது இக்கட்டுரையாசிரியரால் குறியீடுகள் (கோட்டுவடிவ மீன்குறியீடு, சிந்துவெளிக் குறியீடு), 'தமிழி' எழுத்துகள் பொறிக்கப்பெற்ற பெருங்கற்காலப் பானை ஒன்று கண்டறியப்பெற்றது. பானையின் நடுப்பகுதியில் இரு எழுத்துப்பொறிப்புகள் காணப்பெறுகின்றன. முதல் எழுத்தைச் சிந்துவெளிக் குறியீடாகவும் இரண்டாம் எழுத்தைத் தமிழி எழுத்தான 'தி' அல்லது அசோகர்–பிராமியின் 'மா' என்பதாக வாசிக்க முடியும்.



பானையின் அடிப்பகுதி(கோட்டுவடிவ மீன்குறியீடு, மீனின் நடுப்பகுதி முள் குறியீடு )



பானையின் நடுப்பகுதி(சிந்துவெளிக்குறியீடு, தமிழி எழுத்தான 'தி' )

பானையின் அடிப்பகுதியில் இரு குறியீடுகள் காணப்பெறுகின்றன. முதல் குறியீடு கோட்டுவடிவ மீன்குறியீடாகவும் இரண்டாவது குறியீடு மீனின் நடுப்பகுதி முள் போன்றும் அமைந்துள்ளது. மீனின் முள் போன்ற குறியீட்டின் மீது கோட்டுவடிவ மீன்குறியீடு கீறல்முறையில் அமைந்துள்ளது. இவ்விரு குறியீடுகளும் உலகின் பல்வேறு பகுதிகளில் காணப்பெறும் குறியீடுகளோடு பொருந்தி அமைகின்றன. நார்டிக் மொழியின் தொல்குறியீட்டு வடிவம் (Ancient Nordic language), சுவீடன் நாட்டுப் பாறை ஓவியக்குறியீடுகள் (kylver Rune stone, sweden), சுமேரியர்களின் கியூனி:ஃபார்ம் எழுத்துமுறை (sumerian cuniform) ஆகியனவற்றோடு தொடர்புடையதாக அமைகின்றது. (காண்க: *பெருங்கற்காலத் தமிழ்ச்சமூகம் கீழிருந்து மேலெழும் வரலாறு : 2019*).

பழைய 'நார்டிக்' மொழியின் மீன் குறியீடு (கீழே அமைந்த படத்தில் இரண்டாம் குறியீடு) கொடுமணல் மீன்குறியீட்டினை ஒத்துள்ளது. இம்மொழியில் 'othala' என்ற பெயர்க்குறியீடாகக் கொள்ளப்பெறுகின்றது. இது நார்டிக்மொழி பேசும் இனக்குழு மக்களின் பூர்வீகப் பிறப்பிடம், வளமை, குழுக்களின் கட்டளை, இறைவழிபாட்டுத் தொன்மை ஆகியனவற்றின் குறியீடாகக் கருதப்பெறுகின்றது. இது வரலாற்றிற்கு முந்தைய பாண்டிய இனக்குழுக்களின் தன்மையினை ஒத்துள்ளதாகக் கருதலாம். மீன்குறியீடு புலம்பெயர்ந்த பாண்டியர்களின் (இலங்கை–சிந்துவெளி) குறியீடாகப் பிற்காலம் வரையில் தொடர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மீன் குறியீடு வளமையோடு தொடர்புடையது. கடற்கரையோரங்களில் வாழும் தமிழினக்குழுக்களின் குலக்குறி வழிபாட்டில் மீன்குறியீடு முதன்மை பெறுகின்றது. மீன்குறியீடு குலக்குறி (Totemism) வழிபாட்டில் புனிதத்தன்மையடைந்து உணவிலிருந்து விலக்குப்பெறுவதாக ஆ.தனஞ்செயன் பதிவுசெய்கின்றார். (குலக்குறியியலும் மீனவர் வழக்காறுகளும்: 2012)




*பழைய நார்டிக் மொழிக்குறியீடுகள்*

நார்டிக் மொழியில் மீன்குறியீடு பூர்விகப் பிறப்பிடத்தைக் குறித்து அமைவதை இங்குக் கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது. இதனடிப்படையிலும் பாண்டியர்களின் பூர்விகப் பிறப்பிடமான இந்நிலத்தில் கோட்டுவடிவ மீன்குறியீடுகள் தொடர்ச்சியாகக் கிடைத்துவருவதனைக் கருத்திற் கொள்ளலாம். தமிழ் வழங்கும் நிலம் மற்றும் சிந்துவெளி, ஹரப்பா அகழாய்விடம் தவிர்ந்து வேறு எங்கும் மீன் குறியீடுகள் கிடைக்கவில்லை. தற்பொழுது நாகப்பட்டினம் மாவட்டம் நாங்கூரில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறை இணைப்பேராசிரியர் வீ.செல்வகுமார் தலைமையில் செய்யப்பெற்றுக் கொண்டிருக்கும் அகழ்வாராய்ச்சியில் கோட்டுவடிவ மீன்குறியீடு கிடைத்துள்ளது.




*நாங்கூரில் கிடைக்கப்பெற்ற கோட்டுவடிவ மீன் குறியீடு*
நன்றி: முனைவர் வீ.செல்வகுமார்.

பாண்டியர்களின் மீன் குறித்த (சின்னமனூர்ச் செப்பேடு, சதபத பிரமாணம், மகாபாரதக் கதை) தொன்மச் செய்திகளையும் பாண்டியர்களின் கோட்டுவடிவ மீன் குறியீடுகள் கிடைக்கும் (இலங்கை உள்ளிட்ட தமிழகப்பகுதி, சிந்துவெளி, ஹரப்பா) நிலங்களையும் ஒப்பிட்டு நோக்கும்பொழுது இந்தியத்துணைக் கண்டத்தின் பூர்வகுடியினராகப் பாண்டியர்களை முன்னிறுத்த முடியும்.

**பாண்டியர்களின் புலம்பெயர்வு குறித்த இலக்கியப் பதிவுகள்**

வரலாற்றிற்கு முந்தைய காலத்தில் நிகழ்ந்த கடல்கோள், பாண்டியர்களின் புலம்பெயர்தல் ஆகியன குறித்துத் தமிழ்ச்செவ்வியல் இலக்கியப்பதிவுகளும் உரையாசிரியர்களின் உரைக்குறிப்புகளும் கிடைக்கப்பெறுகின்றன. இவற்றை மையமிட்டுச் சில கோட்பாடுகளைக் கருதுகோள் நிலையில் முன்வைக்க முடியும். சங்ககாலத்தில் வாழ்ந்த பாண்டியன் நெடியோன் பற்றிய குறிப்பு புறநானூற்றுப் பாடலொன்றில் காணப்பெறுகின்றது.

'முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே' (புறம்.9:9-11)

கடல்கோளினால் குமரிமலையும் பஃறுளியாறும் அழிந்துபட்டதெனச் சிலப்பதிகாரத்தில் குறிப்பமைந்துள்ளது.

'வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி' (சிலம்பு.காடு.17-22) .

இமயமலை, கங்கைச்சமவெளி முதலிய பகுதிகளில் பாண்டியர்களின் ஆட்சி இருந்தமையினை இப்பதிவு சுட்டுகின்றது. சிலப்பதிகாரத்தில் அமைந்த இப்பதிவு கண்ணகி-திருமாவுண்ணி வாய்மொழிக்கதை போல் (நற்றிணை காலத்திலிருந்து சிலம்பு காலம் வரை) பாண்டியனின் பெருமையினை வாய்மொழியாகச் சுமந்து வந்திருக்கலாம். கடல்கோள் நிகழ்ந்தபொழுது தப்பிய பாண்டியமன்னன் தம்குடிகளுடன் சேரசோழ நாடுகளில் போரிட்டுப் புலம்பெயர்ந்தமையினைத் தொகைநூல்களுள் ஒன்றான கலித்தொகை பதிவுசெய்துள்ளது.

'மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்' (கலி.104 :1-4).

இத்தரவுகளை ஆய்விற்கு உட்படுத்தி சு.கி.ஜெயகரன் தமது நூலில் குமரிக்கண்டம் குறித்த ஆய்வினை நகர்த்திச் சென்றுள்ளார்.

'குமரித் தெய்வத்தின் வழிபாடு காரணமாக இந்நிலப்பரப்பிற்கு குமரி என்ற பெயர் ஏற்பட்டது. இப்பகுதியை ஆண்ட மன்னர்கள் பழமையை உணர்த்தும் பண்டு எனும் பதத்திலிருந்து உண்டான பாண்டியன் எனும் பெயரால் அழைக்கப்பட்டனர். குமரிப்பரப்பின் வடகோடியில் ஓடிய குமரி ஆற்றுக்கும் தென்கோடியில் இருந்த பஃறுளி ஆற்றுக்கும் இடைப்பட்ட பகுதி எழுநூறு காதம் நீளமானது. இப்பகுதியில் ஏழ்தெங்கநாடு, ஏழ்குன்ற நாடு, ஏழ்குணக்கரை நாடு,

ஏழ்குறும்பனை நாடு போன்ற நாற்பத்து ஒன்பது நாடுகளும் குமரி, கொல்லம் போன்ற பன்மலை நாடுகளும் இருந்தன என்று அடியார்க்கு நல்லார் கூறுகின்றார்' ( குமரிநில நீட்சி, 2004:23).

**ஹராப்பா (ராகிகர்கி) அகழாய்வும் மரபணு ஆய்வு முடிவுகளும்**

இந்நிலத்தின் பூர்வகுடிகள் யாரென்பது அண்மையில் 'ராகிகர்கி' (ஹரியானா - ஹராப்பா அகழ்வின் தொடர்ச்சி) மாவட்டத்தில் கண்டறியப்பெற்ற மனித எலும்பின் மரபணு ஆய்வில் உறுதிப்படுத்தப் பெற்றுள்ளது. தொடர்ச்சியாக மேற்கொள்ளப் பெற்றுவரும் இவ்வாய்வு சமூகவியல், மானிடவியல் ஆய்வாளர்களால் தொடர்ந்து விவாதத்திற்குள்ளாக்கப் பெற்றும் முன்மொழியப் பெற்றும் வருகின்றது. அங்கு அகழாய்வு செய்த வசந்த் ஷிண்டே தலைமையிலான ஆய்வுக்குழு அகழ்வாராய்ச்சியில் கண்டறியப் பெற்ற எலும்புகளின் மரபணு பெரிதும் பொருந்துகின்ற இனக்குழுவினர் யார்? அவர்களின் மொழி எது? திராவிட இனங்களின் புலம்பெயர்வுக்(*Dravidains Migration*) காலம் முதலானவை குறித்துச் சில முடிவுகளை வெளியிட்டுள்ளது. அவை வருமாறு :

'*Dr.vasanth shinde, vice-chancellor of the college and director of the rakhigarhi excavation, on Saturday announced and as reported by Indian news paper: we want to study the DNA of the harappan people and try to find out who they were. So we excavated the skeletons scientifically at rakhigarhi. There was no contamination. All the four skeletons are in good condition……………First is the accepted theory: this states that two major migrations in history, the Mediterranean-Australiods(**Dravidians**) almost 20,000 years ago, and the Aryan movement of people almost 7,000-4000 years ago, were both east eastward movement of populations under varying circumstances. The entire work by all the greats of harappan archaeology have stated this............. Secondly , there is the irrefutable evidence of excavated sites in Pakistan and Afghanisthan. Take mehrgarh in balochistan as an example. This site is clearly 9,500 years old. New carbon - dating technology has suggested a 12,000-10,000 year timeline for mehrgarh. Did mehrgarh and Mohenjo-Daro come after Rakhigarhi? Surly no one is going to buy such an assumption in a hurry' (Majid sheikh,may 05 : 2015).*

'*R1a1 is a gene that is commonly observed in high frequency in the modern Indian subcontinent. This particular gene, which is loosly called the "Aryan gene",is usually used as evidence for the Indo-Aryan migration. The theory describes the movement of Aryans from out side the Indian subcontinent from the north of india to the south. But the skeleton found in a particular site shares more affinity with south Indian tribal populations, the early draft of the paper reads. The draft suggests that the rakhigarhi remains is more closely related to the **Irula**, a south Indian tribal community from the **Nilgiri** highlands' (**Ahmed sherrif, shruti singhal(edit.)THE BETTER INDIA**:2018).*

'*DNA Study suggests that the Indus vally culture spoke an early **Dravidian** language' (**kai friese,Aug.31,INDIA TODAY** :2018).*

வசந்த் ஷிண்டே உள்ளிட்ட அவ்வாய்வுக்குழு அண்மையில் ராகிகர்கி (*vasanth s.shinde,PLOSone,feb.21:2018*) பகுதியில் நிகழ்த்திய அகழ்வாராய்ச்சியில் இந்நிலத்தின் தொன்மையான இனக்குழுக்கள் என்று தென்னிந்தியாவின் இருளர்கள், தோடர்களைச் (*Irulas&Todas – Nilgris tribal*) சுட்டியிருப்பது மேற்கத்திய ஆய்வாளர்களைத் தொல்தமிழகத்தின் பக்கம் திருப்பியுள்ளது. மரபணு ஆய்வில் அங்குக் கண்டறியப்பெற்ற மனிதஎலும்பு (*classified as No.14411*) ஆரியர்களுக்கானது அன்று என உறுதிப்படுத்தப்பட்டு விட்டது. இவற்றைக் காணும்பொழுது இந்திய வரலாற்றுக் கதையெழுதலில் இத்தன்மையதான நுண்ணரசியல் பின்புலத்தைத் தவிர்த்துத் தரவுகள் அடிப்படையில் வரலாற்றை மறுகட்டமைப்புச் செய்யவேண்டிய கடமை ஆய்வுலகத்திற்கு உண்டு எனப் புலப்படுகின்றது. இருளர், தோடர், பாண்டியர் முதலான தென்னிந்திய இனக்குழுக்கள் நிலம்சார்ந்தும் பண்பாட்டடிப்படையிலும் ஒற்றுமைப் பண்புடையவர்கள். இவ்வினக்குழுக்களே கடல்கோள் காரணமாகச் சிந்துவெளி நோக்கிப் புலம்பெயர்ந்தவர்கள் என்ற கருத்தியலை இத்தரவுகள் வழியாக நிறுவ முடிகின்றது.

## நிறைவுரை

பாண்டியர்களின் மரபு குறித்த தொன்மக்கூறுகள் சின்னமனூர்ச் செப்பேடு, சதபதபிரமாணம், மகாபாரதக் கதை, தலபுராணங்கள் ஆகியனவற்றில் காணப்பெறுகின்றன. அவை பெரும்பாலும் கடல்கோள், மீன், தோணி குறித்தனவாக அமைகின்றன. கடல்கோள் நிகழ்ந்தமைக்குத் தமிழிலக்கியங்களில் தெளிவான குறிப்புகள் அமைந்துள்ளன. இவற்றின் வழியாக வரலாற்றுக் காலத்திற்கு முன்பு கடல்கோள் ஒன்று நிகழ்ந்தமை உறுதிப்படுத்தப் பெறுகின்றது. தொன்மக்கூறுகளில் இடம்பெறும் கடல்கோள்(பிரளயம்), மீன் , தோணி ஆகியன பாண்டிய மரபினரோடும் அவர்களது மீன்குறியீடுகளுடனும் நேரடியாகப் பொருந்தி அமைகின்றன. கடல்கோள் நிகழ்ந்தபொழுது இலங்கை உள்ளிட்ட தென்பகுதியில் பரவி வாழ்ந்திருந்த பாண்டியர்கள் வடக்குநோக்கிப் புலம்பெயர்ந்துள்ளனர். இவை நில அடிப்படையில் இமயமலை, வடமலை எனத் தொன்மங்களாகச் சுட்டப்பெற்றுள்ளன. "*மீன் தனது கொம்பின் மூலம் அவர்களை வடபுலம் நோக்கி இழுத்துச் சென்றது*" என்ற தொன்மச்செய்தியானது பாண்டியர்கள் மிகப்பெரும் கலங்களின் வழித் தப்பித்து மெல்லமெல்ல இமயமலை அடிவாரப்பகுதிகளில் (சிந்துவெளி, ஹராப்பா) புலம்பெயர்ந்தமையினை உறுதிப்படுத்துகின்றது. இது மீனவர்களின் குலக்குறி மற்றும் கொம்புச்சுறா வழிபாட்டுடன் தொடர்புடையது. பாண்டியர்கள் வடக்குநோக்கிப் புலம்பெயர்ந்த நிகழ்வு வாய்மொழிப்பதிவாகவும் தொன்மப்பதிவாகவும் பன்னெடுங் காலமாக இந்திய இலக்கியங்களிலும் புராண இதிகாசங்களிலும் சுட்டப்பெற்று வந்துள்ளன எனக் கருத முடிகின்றது. வசந்த் ஷிண்டேயின் அகழ்வாராய்ச்சி முடிவு சிந்துவெளி, ஹராப்பா பகுதிகளில் முதலில் குடியேறியவர்கள் இருளர், தோடர் முதலான தென்னிந்தியக்குழுவினர் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது. இன்று நீலகிரி மலைக்குன்றுகளில் வாழும் இவ்வினக் குழுவினரும் பாண்டிய இனக்குழுவினரும் வெவ்வேறு இனங்களைச்

சார்ந்தவர்களாக இருந்திருக்க முடியாது. கடல்கோள் நிகழ்ந்த நில அடிப்படையில் இவர்கள் ஓரினத்தவரேயாவர்.

வரலாற்றிற்கு முந்தைய பாண்டியர்களின் குலக்குறியீடாக விளங்கிய மீன் கோட்டு வடிவம் பெற்று எழுத்துவழக்கம் உருவாகத் தொடங்கிய பெருங்கற்காலத்தில் எழுத்து வடிவங்களுடனும் கலந்து குறிக்கப்பெற்று வந்திருக்கின்றது. இக்கோட்டு வடிவ மீன்குறியீடுகள் தமிழ்வழங்கும் நிலங்களில் நாணயங்கள், பெருங்கற்காலப் புழங்குபொருட்கள், அணிகலன்கள் ஆகியனவற்றில் தொடர்ந்து கிடைத்து வருவதற்கும் தொன்மங்களாக வாய்மொழி மரபில் நிலைத்திருப்பதற்கும் இந்நெடிய மரபுத்தொடர்ச்சியே காரணமாக அமைகின்றதெனலாம். இந்திய இலக்கியங்களில் கிடைக்கப்பெறும் பாண்டியரின் தொன்மங்கள் மற்றும் தொல்பொருள் ஆவணங்களில் கிடைக்கப்பெறும் மீன்குறியீடுகள் ஆகியனவற்றின் அடிப்படையில் இந்நிலத்தின் பூர்வகுடியினராகப் பாண்டியர்களை முன்வைக்க முடியும்.

### துணைநூற்பட்டியல்


- அஞ்சரன், "நாம் யார்? ஆதித் தமிழன் யார்? வரலாற்றில் எது உண்மை?", பொங்கு தமிழ்(யாழ்-இணைய இதழ்),நவம்பர் 30,2014.
- அருள்மொழி க., *இராசராசன் வரலாற்றுக் கூடம்,* தஞ்சாவூர் கையேடு, தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை, சென்னை,2007.
- ஆறுமுக சீதாராமன், *சங்ககால முத்திரைகள்,* தனலட்சுமி பதிப்பகம் , தஞ்சாவூர்,2008.
- ஆனந்தகுமார் பா., "சங்க இலக்கியத்தில் குலக்குறிப் பண்பாட்டு மரபு", கீற்று இதழ்(ஆகஸ்ட்-02),2011.
- இராசமாணிக்கனார் மா., *கல்வெட்டுகளும் தமிழ்ச்சமூக வரலாறும்,* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,2008.
- இராசவேலு சு.,*தொல்லியல் சுடர்கள்,*சேகர் பதிப்பகம், சென்னை,2008.
- இராமன் கே.வி., *தொல்லியல் ஆய்வுகள்* , நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,2014.
- இளங்கோ சி., "பெருங்கற்காலத் தமிழ்ச்சமூகம் தொல்லியல் தரவுகளை முன் வைத்து" , புதியபனுவல் - தொகுதி 3, சென்னை,2011.
- காசிநாதன் நடன.,*தொல்லியல் நோக்கில்,* பாவாணர் பதிப்பகம், சென்னை,1993.
- காசிநாதன் நடன , "தமிழக நில அகழாய்வுகள்", உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு, ஆய்வுமலர் ,கோவை,2010.
- காமாட்சி மு., *சங்க காலம் : தொல்பொருள் ஆய்வுகள்(தொகுதி),* சங்கரன் கி.இரா., "சங்ககாலத்தில் நீர்ப்பாசனம்", சமூக விஞ்ஞானம், மலர்-6, இதழ்-21,சென்னை,2008.
- கார்த்திகேசு சிவத்தம்பி, *பண்டைத் தமிழ்ச் சமூகம்,* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,2010.
- கார்த்திக் செயராம், "மீன்தோணி", ஈகரைத் தமிழ்க் களஞ்சியம், தமிழ் இந்து(மார்ச் -09),2016.

- கிருஷ்ணமூர்த்தி இரா., *சங்ககாலப் பாண்டியமன்னர் பெருவழுதி நாணயம் கண்டுபிடிப்பு*, கார்னெட் பப்ளிகேசன்ஸ், சென்னை,2010.
- குருமூர்த்தி செ., "பழம்பானைக் குறியீடுகளும் தமிழர் பண்பாடும்", உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு",ஆய்வுமலர்,கோவை,2010.
- கோசாம்பி டி.டி.,(தமிழ் : சிங்கராயர்), *இந்தியவரலாறு ஓர் அறிமுகம்*, விடியல் பதிப்பகம், கோவை,2013.
- சதாசிவப்பண்டாரத்தார், *பாண்டியர் வரலாறு*, செண்பகா பதிப்பகம், சென்னை,2009.
- சங்கரன் கி.இரா., *புதுக்கோட்டை கல்வெட்டுகளில் கோயில்களும் கடவுள்களும்*, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,2014.
- சாமி, பி.எல்., *தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு* , நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,1980.
- சீனிவாசன் இரா., "சிந்துவெளிக்குறியீடுகளை ஒத்த குறியீடுகள் வேலூர் மாவட்டத்தில் கண்டுபிடிப்பு",புதியபனுவல்,தொகுதி 3, இதழ்4,2011.
- செல்வராசு நா. சிலம்பு, *சங்க இலக்கிய மறுவாசிப்பு*, காவ்யா பதிப்பகம், சென்னை,2009.
- தாமோதரன் கு.,*தொல்லியல் நோக்கில் தமிழகம்*, தொல்பொருள் ஆய்வுத்துறை, தமிழ்நாடு அரசு,1999.
- திருநாவுக்கரசு க.த., *சிந்துவெளித்தமிழ் வடிவங்கள்*,மணியகம்,சென்னை,1982.
- பவுன்துரை இராசு, *பண்டைய தமிழக வரைவுகளும் குறியீடுகளும்*, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை,2009.
- பரமசிவன் தொ.,*தெய்வம் என்பதோர்*, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2018.
- .............., *பண்பாட்டு அசைவுகள்*, காலச்சுவடு பதிப்பகம்,நாகர்கோவில்,2018.
- .............., *செவ்வி*,கலப்பை வெளியீடு,சென்னை,2013.
- .............., *அறியப்படாத தமிழகம்*, காலச்சுவடு பதிப்பகம்,நாகர்கோவில்,2014.
- பார்த்திபன் த., "திணைவாழ்வியலுக்கு முந்தைய தமிழ்ச்சமூகத்தைத் தேடி", தினமணி(ஏப்ரல்-13),2018.
- பாரத்வாஜர் வ., *ஆரியம் திராவிடம் இந்தியம்*, காவ்யா பதிப்பகம்,சென்னை, 2013.
- பாலகிருஷ்ணன் ஆர்., *சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்*, பாரதி புத்தகாலயம், சென்னை,2018.
- பாலாஜி க., *பெருங்கற்காலப் பண்பாடு*, காவ்யா பதிப்பகம், சென்னை,2013.
- .............., *பெருங்கற்காலத் தமிழ்ச்சமூகம் கீழிருந்து மேலெழும் வரலாறு*, இனம் பதிப்பகம், கோயம்புத்தூர்,2019.
- .............., "பெருங்கற்காலத் தமிழ்ச்சமூகமும் தமிழி எழுத்துப் பொறிப்புகளும்", இனம் தமிழ் இணைய ஆய்விதழ், (மலர்-1, இதழ்-2), கோயம்புத்தூர்,2015.
- மதிவாணன் இரா., "சிந்துவெளித் தமிழ் எழுத்துகள்", உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு, ஆய்வுமலர் ,கோவை,2010.

- ❖ **மதிவாணன் இரா.,** *இடைக்கழக சிந்துவெளி எழுத்து படிப்பது எப்படி,* எழிலினி பதிப்பகம்,சென்னை,2017
- ❖ **மாதையன் பெ.,***சங்க இலக்கியத்தில் வேளாண் சமூகம்,* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,2010.
- ❖ ………………,*தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் காலமும் கருத்தும்,* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,2011.
- ❖ ………………,*சங்க இலக்கியத்தில் குடும்பம்,* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,2010.
- ❖ ………………,*சங்க இலக்கியச் சொல்லடைவு,* தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்,2007.
- ❖ **முத்துமோகன் நா.,** *இந்தியக்கதை:ஏகம்–அநேகம்–சாதியம்,* பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,மதுரை,2003.
- ❖ **முத்தையா இ.,** *பழந்தமிழர்ப் பண்பாட்டு வெளிகளின் அரசியல்,* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,2014.
- ❖ **விசயவேணுகோபால் கோ.,** "தமிழகத்தின் எழுத்துவழக்கம் அசோகன் காலத்திற்கும் முந்தையது",மணற்கேணி(நவம்பர்–திசம்பர்) இதழ்,2011.
- ❖ **வையாபுரிப்பிள்ளை ச.,***சங்க இலக்கியம் பாட்டும் தொகையும்,* பாரிநிலையம், சென்னை,1967.
- ❖ ராகுல சாங்கிருத்தியாயன் (தமிழ்:யூமா வாசுகி), *வால்கா முதல் கங்கை வரை,* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,2019.
- ❖ **ராஜன் கா.,** *தொல்லியல் நோக்கில் சங்ககாலம்,* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை,2010.
- ❖ ராஜ்கௌதமன், *ஆகோள் பூசலும் பெருங்கற்கால நாகரிகமும்,* தமிழினி பதிப்பகம், சென்னை,2009.
- ❖ ரொமிலா தாப்பர்(தமிழ்:அ.முதுகுன்றன்), *முற்கால இந்தியா தொடக்கத்திலிருந்து கி.பி.1300 வரை,* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,2017.
- ❖ ரொமிலா தாப்பர்(தமிழ் : கே.என்.பணிக்கர்),*வரலாறு – பண்பாடு,* சவுத் விசன், கோபால புரம், சென்னை,2012.
- ❖ **தமிழண்ணல்,** *தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும்,* மீனாட்சி புத்தக நிலையம், மதுரை,2008.
- ❖ **தர்ஸ்டன், எட்கர்,** 1909 (தமிழ் : க.ரத்னம்), *தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்,* தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2005.
- ❖ ………..,1909 (தமிழ்:க.ரத்னம், காதம்பி ரங்காச்சாரி), *தமிழகத் தொல்குடிகள்,* அடையாளம் பதிப்பகம், திருச்சி,2017.
- ❖ **பக்தவத்சல பாரதி,***தமிழர் மானிடவியல்,* அடையாளம் பதிப்பகம், திருச்சி, 2002.
- ❖ ………..,*மானிடவியல் கோட்பாடுகள்,* அடையாளம் பதிப்பகம்,திருச்சி,2005.
- ❖ ………..,*தமிழகப் பழங்குடிகள்*(இ.ப.), அடையாளம் பதிப்பகம், திருச்சி,2008.
- ❖ ………..,*பண்பாட்டு மானிடவியல்,* அடையாளம் பதிப்பகம், திருச்சி,2011.

- ……….,*இன்றைய தமிழ்ச் சமூகம்*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை,2013.
- ………., *இலக்கிய மானிடவியல்*,அடையாளம் பதிப்பகம், திருச்சி,2014.
- பவுல்பான்(தமிழ் : கோ.சுந்தர்),*தொல்லியல் மிகச் சுருக்கமான அறிமுகம்*, அடையாளம் பதிப்பகம், திருச்சி,2007.
- ஜா டி.என்.,(தமிழ் : அசோகன் முத்துசாமி),*பண்டையக் கால இந்தியா*, பாரதி புத்தகாலயம்,சென்னை,2017.
- ஜான் சாமுவேல் ஜி., *பண்பாட்டுப் பயணங்கள்*, ஹோம்லேண்ட் பதிப்பகம், சென்னை,2010.
- ஜெயகரன் சு.கி., *குமரிநில நீட்சி*, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்,2004.
- **Amit Arora**, "Aryans who? Haryana says archaeology finds will disprove mueller's theory", Times of India (jul.7), 2018.
- **Asko parpola**,*The Roots Of Hinduism(The Early Aryans and the Indus Civilization)*, Oxford Unversity Press,2015.
- **Brij mohan**, "history of plus and minus signs", central hindu college, banaras, Varanasi,2009.
- **Emile Durkheim**,The Elementary Forms of the Religious Life,University of Paris,France,1912.
- **Iravatham Mahadevan**, *Early Tamil Epigraphy: From the Ealiest Times of Sixth Century A.D.,Journal of the American Oriental Socity*,2004.
- ………., *The Indus script(Texts,condordance and Tables)*, The TATA Institute of Fundamental Research,Bombay,1977.
- **Kai friese**, "Indus valley vedic or not?:why DNA findings from Rakhigarhi site are controversial,India today",Aug,31,2018.
- **Majid Sheikh**, "Haryana discovery that promises to challenge our ancient history",DAWN( may,05),2015.
- **Rajan k.**,*Early Writing System(A journey from Graffitti to Brahmi)*,pandya nadu centre for Historical Research,Madurai,2015.
- **Romila Thaper**, *Anicient Indian social history some interpretations*, orient longman limited, Newdelhi, 1996.
- **Max Muller**, **Egelling**,*Satapatha Brahmana*,sacred books of the east,vol.12-47,1882.
- **Vasanth s. shinde**, **yong jun kim**,**Eun jin woo**,**Nilesh jadhav**, **etc.**, "Archaeological and Anthropological studies on the Harappan cemetery of Rakhigarhi",PLOS(feb.21),2018.